**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.216/2022**

**Deposition of PW-10** **LW-12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெயராம் | **Age** | : | 39/2026 |
| **Father's Name** | : | திரு. ராமசாமி | **Religion** | : | இந்து |
| **Village** | : | கோம்பை | **Calling** | : | தலைமை காவலர் |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28/07/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் போடி நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.6.2022 ஆம் தேதி போடி தாலுகா காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்தபோது தாலுகா காவல் நிலைய குற்ற எண்.173/2022 இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 304A ன் கீழான வழக்கில் இறந்துபோன மணிகண்டன் என்பவரது பிரேதத்தை பிரேத விசாரணைக்கு உட்படுத்த வேண்டி காவல் ஆய்வாளர் என்னிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்.

2) நான் தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு மருத்துவர் கணபதி அவர்களிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து இறந்த நபரின் உடலை அங்க மச்ச அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனைக்கு உதவியாக

இருந்தேன். பிரேத பரிசோதனை முடித்த பின்பு இறந்த நபரின் உடலை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி, குறுக்குவிசாரணை இல்லை எனத் தெரிவித்ததால் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.28 16:16:45 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**